**செய்தி வெளியீடு எண்:373** **நாள் : 27.07.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் குறித்த, மண்டல மேலாளர்களுடனான மாநில அளவிலான கலந்தாய்வு கூட்டம், **27.07.2015** இன்று சென்னை கீழ்ப்பாக்கம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தலைமை அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு **2014–15** காரீப் கொள்முதல் பருவத்தில், **1722** நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, இன்று வரை **14** இலட்சத்து **45** ஆயிரம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் இருப்பில் உள்ள நெல்லை எந்த நேரமும் விற்பனை செய்ய ஏதுவாக, தற்போது **123** நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டுவருகின்றன. மத்திய அரசு நிர்ணயிக்கும் குறைந்த பட்ச ஆதார விலைக்கு மேல் ஊக்கத்தொகை ஏதும் வழங்கக்கூடாது என மத்திய அரசு மாநிலங்களுக்கு நிபந்தனை விதித்தபோதிலும் கூட, மாண்புமிகு அம்மா அவர்கள், சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.**70**ம், சாதா ரக நெல்லுக்கு ரூ.**50**ம் வழங்க உத்தரவிட்டதின் பேரில் இதுவரை கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கு ரூ.**93** கோடியே **20** இலட்சம் ஊக்கத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்பட்ட நெல்லில் **10** இலட்சம் மெ.டன் அரசு நவீன அரிசி ஆலைகள் மற்றும் அரவை முகவர்கள் மூலம், அந்தந்த மாவட்ட மக்களின் தேவைக்கேற்ப தரமான புழுங்கல் மற்றும் பச்சரிசியாக அரவை செய்யப்பட்டு விலையில்லா அரிசி திட்டத்தின் கீழ் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ், **34** ஆயிரத்து **264** நியாய விலை அங்காடிகள் மூலம், **1** கோடியே **88** இலட்சத்து **43** ஆயிரத்து **508** குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும், **3** இலட்சத்து **23** ஆயிரம் மெ.டன் விலையில்லா அரிசி வழங்குகின்ற ஒரே மாநிலம் இந்தியாவிலேயே மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி புரிகின்ற தமிழ்நாடு மட்டும் தான் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய், ஆகிய அத்தியாவசிய பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு சீரான முறையில் விநியோகம் செய்வதுடன், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ், பருப்பு வகைகள், பாமாயில் முதலியன மானிய விலையில் மாதந்தோறும் வழங்கப்படுகின்றன. காய்கறிகளின் விலையைக் கட்டுப்படுத்தி தரமான காய்கறிகளை பொதுமக்களுக்கு வழங்க **58** கூட்டுறவு மற்றும் அமுதம் பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகள் செயல்பட்டுவருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மற்றும் சேமிப்பு கிடங்கு நிறுவனம் மூலமாக, தமிழ்நாட்டில் சேமிப்பு கட்டமைப்பு வசதிகள் 13 இலட்சம் மெ.டன்னிலிருந்து, 22 இலட்சம் மெ.டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர, ரூ.58.48 கோடி செலவில் 50 ஆயிரம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 2 நவீன சேமிப்புக்கலன்கள் (Silos) கட்டுவதற்கு ஆயத்த பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

அரசு நவீன அரிசி ஆலைகளின் திறனை மேம்படுத்தி, பொது விநியோகத் திட்ட தேவைக்கான அரிசியை உயர் தரத்துடன் தயார் செய்யும் பொருட்டு 58 கோடியே 86 இலட்சம் செலவில் 14 அரசு அரிசி ஆலைகள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 9 அரிசி ஆலைகள் 36 கோடி ரூபாய் செலவில் நவீனமயமாக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டதன்படி நடவடிக்கைகள் துவங்கப்பட்டுள்ளன என மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

பொது விநியோகத் திட்ட கிடங்குகளிலிருந்து, நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்படும், லாரிகள் மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட வழித்தடங்களிலேயே, செல்வதை மண்டல மேலாளர்கள் தங்களது ஆய்வின் போது உறுதி செய்ய வேண்டும். உணவுப் பொருள் வழங்கல் துறை அலுவலர்கள் வழங்கும் மாதாந்திர ஒதுக்கீட்டில் 60% முன் நகர்வு செய்து, எஞ்சியுள்ள 40% ஒதுக்கீட்டு மாதத்தின் 5ம் தேதிக்குள் தொய்வின்றி இயக்கம் செய்யப்பட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

பொது விநியோகத் திட்டம், சிறப்பு பொது விநியோகத் திட்டம், சத்துணவு கூடங்கள், அரசு மாணவ, மாணவியர் விடுதிகள், அரசு மருத்துவமனைகள், காப்பகங்கள் (Homes), ஆகியவற்றுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்கள் உரிய தரத்துடன் இயக்கம் செய்யப்படுவதை கிடங்கு தர ஆய்வாளர்கள் மீண்டும், மீண்டும் உறுதி செய்ய வேண்டும். அம்மா உணவகங்களுக்கு வழங்கப்படும், புழுங்கல் அரிசி, பச்சரிசி, கோதுமை, ஆகியன தரமாக, நகர்வு செய்யப்படுவதை கிடங்கு தர அலுவலர்கள், மண்டல தரக்கட்டுப்பாட்டு மேலாளர்கள், மண்டல மேலாளர்கள் அனைவரும் நேரடியாக கண்காணித்து வர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தமிழ் நாட்டின் பொது விநியோகத் திட்ட தேவைக்கென அரசு கிடங்குகளிலும், இந்திய உணவுக் கழக கிடங்குகளிலும், நான்கு மாத தேவைக்கான சுமார் 14 இலட்சத்து 25 ஆயிரம் மெ.டன் தரமான புழுங்கல் மற்றும் பச்சரிசி கையிருப்பு உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

அரசின் திட்டங்களின் முழுப் பயன்களும், உரியவர்களை சென்றடையும் பொருட்டு, அத்தியாவசியப் பொருள்கள் கடத்தல் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருள்கள் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 35,301 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 25,175 நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுள் 724 நபர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின் (BM Act) கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் சீரிய தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் **உணவுத்துறை கடைபிடித்து வரும் சிறப்பான கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை ஏனைய மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென, மத்திய அரசின் உணவு மற்றும் பொது விநியோகத் திட்டத்துறை அனைத்து மாநிலங்களின் தலைமை செயலர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது** என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

இக்கலந்தாய்வு கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலாளர் திரு. சிவதாஸ்மீனா,இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் திரு.கா.பாலசந்திரன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திருமதி. ஜெயஸ்ரீமுரளிதரன்,இ.ஆ.ப., உணவுப்பொருள் குற்றப் புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குனர் திரு.கே.இராதாகிருஷ்ணன், இ.கா.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரசு முதன்மை செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**